07.09.2017

தினமலர்

## கொடைக்கானலில் குறிஞ்சி சீசன் துவக்கம்

கொடைக்கானல்கொடைக்கானல் :, பிரையன்ட் பூங்காவில் , குறிஞ்சி செடிகளில் பூக்கள் பூக்க துவங்கியுள்ளன வழக்கமாக ., 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இப்பூக்கள், 2006ம் ஆண்டில் நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் பூத்தன அடுத்து ., 2018ல் பூக்க வேண்டிய நிலையில் , மாறுபட்ட சீதோஷ்ண நிலையால் , கடந்த ஆண்டே, பல இடங்களில் பூத்தன பச்சை நிற செடிகளின் நடுவே ., ஊதா நிறத்தில் புலியூர், கவுஞ்சி பகுதிகளில், பூக்கள் பூக்கத் துவங்கியுள்ளன சுற்றுலாப் பயணியரும் ., குறிஞ்சி பூக்களை வியப்புடன் கண்டு ரசிக்கின்றனர்.

## கொடைக்கானலில் குறிஞ்சி மலர்கள்



கொடைக்கானல் கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் குறிஞ்சி செடிகளில் : பூக்கள் பூக்க துவங்கியுள்ளது இந்த பூங்காவில் உள்ள நீலக்குறிஞ்சி செடியின் தாவர . பெயர்'ஸ்டிரோபிலாந்தஸ் குந்தியானா '. இது 'அகாந்தாசியே' எனும் குடும்பத்தை சார்ந்தது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இப்பூக்கள் , கடந்த 2006ம் ஆண்டில் நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் பூத்தது அடுத்து .2018ல் பூக்க வேண்டிய நிலையில் , மாறுபட்ட சீதோஷ்ண நிலையால் கடந்த ஆண்டே பல இடங்களில் பூத்தது பச்சை நிற. செடிகளின்நடுவே 'லேவண்டர்' நிறத்தில் புலியூர், கவுஞ்சி பகுதிகளில் பூக்கள் பூக்கத்

துவங்கியுள்ளது தற்போது பிரையன்ட் பூங்காவின் குறிஞ்சி தோட்டத்திலும் பூக்கள் . . துளிர்விட துவங்கியுள்ளது தோட்டக்கலைத் துறையினர் செடிகளில் உள்ள குறிஞ்சி மலர்களை பாதுகாத்து வருகின்றனர் சுற .◌றுலாப் பயணிகளும் குறிஞ்சி பூக்களை வியப்புடன் கண்டு ரசிக்கின்றனர்.

தினமணி

## ரூ.100 கோடியில் வேளாண் கட்டடங்கள்: முதல்வர் திறப்பு



**வேளாண்மைத் துறை சார்பில் ரூ. 100 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் , கிடங்குகள் உள்ளிட்டவற்றை தலைமைச் செயலகத்தில் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்த முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி.**

வேளாண்மைத் துறை சார்பில் ரூ. 100 கோடியில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. புதிய கட்டடங்களை காணொலிக் காட்சி மூலமாக முதல்வர் பழனிசாமி திறந்தார். இதுகுறித்து , தமிழக அரசு புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: திருச்சி மாவட்டம் கள்ளிக்குடியில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் கட்டப்பட்ட காய்கறிகள் , பழங்கள், பூக்களுக்கான மத்திய சந்தையை முதல்வர் திறந்து வைத்தார்.

இந்தப் புதிய மத்திய சந்தை மூலமாக , விவசாயிகள் வேளாண் விளைபொருள்களை

சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகரிக்கவும் , வியாபாரிகள் சிரமம் ஏதுமில்லாமல் பரிவர்த்தனை மேற்கொள்ளவும் வசதியாக இருக்கும்.

இந்த மத்திய சந்தை ஆயிரம் கடைகள் , 2 ஆயிரம் மெட்ரிக் டன் குளிர்பதனக் கிடங்கு , 60 மெட்ரிக் டன் எடை மேடை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

கோவை அன்னூர் , தருமபுரி, பாப்பிரெட்டிபட்டி, திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை , ரெட்டியார்சத்திரம், புதுக்கோட்டை திருவரங்குளம் , திருச்சி திருவெறும்பூர் , வையம்பட்டி, தேனி, சங்கரன்கோவில், தென்காசி, சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் புதூர் , பரமக்குடி, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் 14 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்கக் கட்டடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார்.

நபார்டு வங்கியின் கிடங்கி உள்கட்டமைப்பு நிதியின்கீழ் , விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, திருச்சி மாவட்டம் லால்குடி , தேனி மாவட்டம் கம்பம் , ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி , பட்டுக்கோட்டை, விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆகிய இடங்களில் அலுவலகக் கட்டடத்துடன் கூடிய கிடங்குகளை அவர் திறந்தார்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் , ஒரத்தநாடு ஆகிய இடங்களில் உலர்களத்துடன்கூடிய பரிவர்த்தனைக் கூடம் , விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் , உளுந்தூர்பேட்டை, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, வளத்தி, அவலூர்பேட்டை, சங்கராபுரம் ஆகிய இடங்களில் பரிவர்த்தனைக் கூடங்களையும் முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் , அமைச்சர்கள் ஆர்.துரைக்கண்ணு , வெல்லமண்டி என்.நடராஜன் , எஸ்.வளர்மதி, தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு

வடக்கு ஆந்திரக் கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக தமிழகம், புதுவையில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்குப் பருவமழை கர்நாடகம் , கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் , வட கேரளப் பகுதியில் வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி உருவாகியிருந்ததால் தமிழகத்தின் சில இடங்களில் மழை பெய்துள்ளது. இந்நிலையில் அந்த மேலடுக்கு சுழற்சி லட்சத்தீவை

நோக்கி நகர்ந்துவிட்டது. ஆந்திரக் கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலையால் தமிழகத்தில் கனமழை பெய்யக்கூடும். இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

ஒடிஸா கடலோரப் பகுதியில் இருந்து ஆந்திர மாநிலத்தின் உள்பகுதி வரை பரவியிருந்த காற்றழுத்தத் தாழ்வுநிலையானது , சற்று நகர்ந்து வடக்கு ஆந்திர கடற்கரை வரை பரவியுள்ளது. இதன் காரணமாகவும் வெப்பச்சலனத்தின் காரணமாகவும் தமிழகம் , புதுச்சேரியில் அநேக இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். ஒரு சில இடங்களில் கன மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று தெரிவித்தனர். புதன்கிழமை காலை வரை பதிவான கனமழை நிலவரம் (மி.மீல்.): காஞ்சிபுரம் - 100, தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, அரியலூர் மாவட்டம் திருமனூர், திருச்சி மாவட்டம் லால்குடி - 90, தஞ்சை மாவட்டம் பெரிய அணைக்கட்டு - 80 , விருத்தாசலம், பெரியகுளம், திருச்சி மாவட்டம் சமயபுரம் - 70, நாகர்கோவில், பேச்சிப்பாறை, வாணியம்பாடி, முசிறி, ஸ்ரீபெரும்புதூர் -60.

## பார்த்தீனிய செடிகளை ஒழிக்க ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு!



தாராபுரம்: பார்த்தீனிய செடிகளை ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு மூலம் அகற்றுவது குறித்து வேளாண் துறை விளக்கமளித்துள்ளது.

இதுகுறித்து தாராபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன் கூறியதாவது: பயிர் சாகுபடி இல்லாத சூழ்நிலையில் வயல்களில் பார்த்தீனியம் செடிகள் அதிகமாக காணப்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த

வேண்டியது மிக அவசியம்.

பார்த்தீனிய செடிகளின் இயல்புகள்

ஒரு செடி 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் விதைகள் உற்பத்தி செய்து வேகமாகப் பரவும் தன்மையுடையது. விதைகளுக்கு உறக்க காலம் கிடையாது. விழுந்தவுடன் முளைக்கும். விதைகள் காற்று, நீர் மூலம் அனைத்து இடங்களுக்கும் எளிதாகப் பரவும். இந்தச் செடி அதிக வறட்சி , மழையைத் தாங்கி அனைத்து மண்களிலும் வளரும்.

**பாதிப்புகள்**

கால்நடைகள், மனிதர்களின் உடல்களில் இந்தச் செடி படும்போது சர்ம நோய்கள் ஏற்படும். இதனை உண்டால் கால்நடைகளுக்குப் பாதிப்பும் , மனிதர்களுக்கு இப்பூக்களின் மகரந்தம் சுவாசக் கோளாறையும் ஏற்படுத்தும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

வளர்ந்த செடிகள் அதிகம் உள்ள இடங்களில் கையுறைகளைப் பயன்படுத்தி பிடுங்கி அழுத்திட வேண்டும். சாகுபடி நிலங்களில் செண்டுசாமந்தி(மேரிகோல்டு) பயிரிட்டு கட்டுப்படுத்தலாம். தரிசுநிலம் , சாலையோரங்களில் இதைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் சாதாரண உப்பைக் கரைத்து தெளித்து கட்டுப்படுத்தலாம். சாகுபடி நிலங்களில் பயிருக்கு ஏற்ப அட்ரசின் , கிளைபோசேட், மெட்ரிபூசன் போன்ற களைக் கொள்ளிகளை வேளாண் துறை அறிவுரையின்படி பயன்படுத்தலாம். சைகோகிராமா மைகாலரேட் எனும் உயிரியல் காரணி பார்த்தீனியத்தின் இலைகளைச் சாப்பிடுவதன் மூலம் இதன் பரவலைக் கட்டுப்படுத்துகிறது.

பார்த்தீனியத்தைக் கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும் முறை

பூ பூக்கும் முன் பார்த்தீனிய செடிகளைச் சேகரித்து அவற்றை 5 முதல் 10 செ.மீ. நீளவாட்டில் சிறியதாக நறுக்கி 1 மீ. சுற்றளவில் 10 செ.மீ. உயரத்துக்கு கீழே இருந்து அவற்றை அடுக்க வேண்டும். இவற்றின் மேல் 10 சதவீதம் மாட்டுச் சாணத்தை கரைச்சலாக கொண்டு சமமாகத் தெளிக்க வேண்டும். இவற்றை 10 நாள்கள் மக்குவதற்காக வைக்கவேண்டும். 5 நாள்கள் கழித்து 250 முதல் 300 மண்புழுக்களை இந்த மக்கிய உரத்தில் விடவேண்டும் என்றார்.

## நிலக்கடலையில் சிவப்பு கம்பளிப்புழு



சேலம்: நிலக் கடலைப் பயிரில் சிவப்பு கம்பளிப்புழுவைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை வேளாண்துறை தெரிவித்துள்ளது. சிவப்பு கம்பளிப் பூச்சியின் புழுக்கள் நிலக்கடலை பயிரைக் குறிப்பாக மானாவாரிப் பயிரைத் தாக்கி அதிக சேதம் விளைவிக்கக் கூடியவை. இது ஒரு சில பருவங்களில் மாத்திரம் மிக அதிக அளவில் தோன்றக் கூடிய 'எபிடமிக் ' வகைப்பூச்சி. காலநிலையைப் பொருத்து பூச்சிகள் ஒரே சமயத்தில் ஏராளமான எண்ணிக்கையில் தோன்றும். தமிழகத்தில் கோவை , கடலூர், விழுப்புரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஜூன் - ஜூலை மாதங்களிலும் , மதுரை, ராமநாபுரம் மாவட்டங்களில் ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களிலும் திடீரென்று பெருவாரியாக தோன்றும் . இவை ஆயிரக்கணக்கில் அலை அலையாக அடுத்துள்ள வயல்களுக்கு செல்லும். புழுக்கள் கடித்து சேதப்படுத்திய பயிர் , கால்நடைகள் மேய்ந்ததை போன்று தோன்றத்தை அளிக்கும். தாக்கப்பட்ட பயிரிலிருந்து பெரும்பாலும் மகசூல் பாதிக்கும். இது நிலக்கடலை தவிர கொண்டைக்கடலை , துவரை, சோளம், கம்பு, பருத்தி , கேழ்வரகு மற்றும் ஆமணக்கு பயிர்களையும் தாக்கக்கூடியது.

**பூச்சிகளின் வாழ்க்கை சரிதம்:** நல்ல கோடை மழைக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குப் பின்னர் மாலை வேளைகளில் மண்ணுக்கு அடியிலுள்ள மண் கூடுகளிலிருந்து அந்து பூச்சிகள் வெளிவரும். வெளிவந்த உடனேயே அவை இனச்சேர்க்கை செய்து முட்டைகள் இட ஆரம்பிக்கும். ஒரு பெண் அந்து பூச்சி 2 - 6 நாள்களில் 600 முதல் 700 முட்டைகளை குவியல்களாக நிலக்கடலை இலைகளின் அடிப்பரப்பில் இடும். சில வேளைகளில் வேறு பயிர்களின் இலைகள் , மண்கட்டிகள், காய்ந்துபோன குச்சிகள் போன்றவற்றிலும் முட்டையிடக்கூடும். முட்டைகள் மஞ்சள்

நிறமாகவும், பளபளப்பாகவும் தென்படும். முட்டைகளிலிருந்து 2 - 3 நாள்களில் இளம்புழுக்கள் வெளிவரும். அவை கூட்டம் கூட்டமாக இலைகளின் அடிப்பரப்பில் இருந்து கொண்டு , ஒரிரு நாள்கள் வரையில் பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். அவை சாம்பல் நிறமாகவும் , ரோமம் கலந்தும் தென்படும் . சுமார் 40 முதல் 50 நாள்களில் அவை முழு வளர்ச்சி அடையும். வளர்ந்த புழுக்களைவிட இளம் புழுக்கள் அதிக சுறு சுறுப்புடன் இயங்குவதோடு அதிக சேதத்தையும் விளைவிக்கக் கூடியவை. நன்கு வளர்ந்த புழுக்கள் 5.0 செ.மீ நீளத்திலும் , சிகப்பு கலந்த பழுப்பு நிறத்திலும் , உடல் முழுவதும் சிகப்பு கலந்த பழுப்பு நிற ரோமங்களைக் கொண்டு காணப்படும். ஓரளவு மழைபெய்து , மண் நனைந்து மிருதுவானவுடன் வளர்ந்த புழுக்கள் மண்ணைக் குடைந்து சென்று 10 முதல் 20 செ.மீ. ஆழத்தில் மண் கூட்டினுள் கூண்டு புழுவாக மாறும் அந்த சமயத்தில் மழை இல்லாவிட்டால் பெரும்பாலான புழுக்கள் மண்ணுக்குள் செல்ல முடியாதபடி மடிந்துவிடும். கூண்டுப்புழு பருவம் 10 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். அடுத்த வருடம் மறுபடியும் கோடைமழைக்குப் பின்னர் அவை அந்துப் பூச்சிகளாக வெளிவரும் . அந்துப் பூச்சிகள் நடுத்தர அளவுடன் வெண்மை நிறத்திலும் முன் இறக்கைகளின் மேல் விளிம்பை ஒட்டி மஞ்சள் நிறக்க கோடுடனும் பழுப்பு நிற கீற்றுக்களுடனும் பின் இறக்கைகள் வெண்மை நிறத்தில் கருப்புநிற கோடுடனும் பழுப்பு நிற கீற்றுகளுடனும் பின் இறக்கைகள் வெண்மை நிறத்தில் கருப்பு நிறப்புள்ளிகளுடனும் தென்படும். தலையிலும் ஒரு மஞ்சள் நிறப்பட்டை காணப்படும்.

**தாக்குதல் அறிகுறிகள்:** இளம்புழுக்கள் பச்சையத்தை சுரண்டி தின்கின்றன. வளர்ந்த புழுக்கள் இலைகளைச் சாப்பிட்டு சேதம் விளைவிக்கிறது. செடிகளின் அடித்தண்டு , காம்புகள் , நடு நரம்புகள் தவிர மற்ற எல்லா இலைபாகங்களையும் கடித்து உண்டு விடும். இவைகள் சேதமுறுவதால் ஒளிச்சேர்க்கை தடைபட்டு காய்ப்பிடிப்பு குறைந்துவிடும். சில சமயங்களில் பயிரில் எந்த மகசூலும் கிடைக்காது. 100 மீட்டருக்கு 8 முட்டை குவியல்கள் தென்படுதல் பொருளாதார சேதநிலை ஆகும்.

தடுப்புமுறை: கோடை உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழித்தல். முட்டை குவியல்களைச் சேகரித்து அழிக்க வேண்டும். விளக்குப் பொறி மற்றும் சொக்கப்பனை வைத்து அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

நிலக்கடலைப் பயிரில் சோயா மொச்சை அல்லது துவரை அல்லது தட்டைப்பயறு ஊடு பயிராக பயிரிடலாம். இவற்றில் இடும் முட்டைகளை எளிதில் சேகரித்து அழிக்கலாம். வெயில் நேரங்களில் புழுக்கள் கூட்டம் கூட்டமாக துவரை பயிரின் மேல் வந்து இருக்கும் அவற்றை எளிதில் சேகரித்து அழிக்கலாம்.

**உயிரியல் முறைகள்:** நியூக்ளியார் பாலிஹெட்ரோசிஸ் நச்சுயிரி (என்.பி.வி.) இளநிலை

புழுக்களை நன்கு கட்டுப்படுத்தக் கூடியவை . இதற்கு ஒரு ஏக்கருக்கு 100 புழு சமன். அதாவது நச்சுயிரிகள் தாக்கி மடிந்து போன 100 புழுக்களிலிருந்து கிடைக்கக் கூடிய நச்சுயிரி துகிள்களை போதுமான நீருடன் கலந்து பயிரின்மேல் நன்கு தெளிக்க வேண்டும். ஒரு புழு சமன் என்பது 6 109 நச்சுயிரி துகிள்களுக்கு சமமானது.

**விஷத் தெளிப்பு :**

1. ரோமம் முளைக்காத இளநிலைப் புழுக்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பாசலோன் 4 சத தூள் அல்லது குயினல்பாஸ் 1.5 சத தூள் அல்லது கார்பரில் 10 சத தூள் 10 கிலோவினை 1 ஏக்கருக்கு தூவ வேண்டும்.

2. சற்று வளர்ந்த புழுக்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டைகுளோர்வாஸ் 250 மி.லி அல்லது குயினால்பாஸ் 30 இசி 300 மி.லி அல்லது குளோரிபைரிபாஸ் 20 இசி 500 மி.லி அல்லது பாசலோன் 45 இசி 300 மி.லியை 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவம் சேர்த்து கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

3.வளர்ந்த புழுக்களைக் கட்டுப்படுத்த டைகுளோர்வாஸ் ஏக்கருக்கு 300 மி.லி யினை தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இப்பூச்சி ஒரே சமயத்தில் அதிக பரப்பளவில் தோன்றக்கூடியது. ஆதலால் எல்லா விவசாயிகளும் ஒன்று சேர்ந்து கூட்டாக ஒருங்கினைந்த கட்டுப்பாட்டு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என மகுடஞ்சாவடி வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.செல்லதுரை தெரிவித்
துள்ளார்.

## தமிழகம், புதுவையில் கனமழை வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தற்போது தென்மேற்கு வங்கக் கடலில் , தமிழக கடலோரத்தை ஒட்டியுள்ள பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. அதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

புதன்கிழமை காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி , காஞ்சிபுரத்தில் 10 செமீ, திருக்காட்டுப்பள்ளி, அரியலூர் , திருமனூர், லால்குடியில் தலா 9 செமீ, தஞ்சாவூர் பெரிய அணைக்கட்டில் 8 செமீ, விருத்தாச்சலம், பெரியகுளம், திருச்சி சமயபுரத்தில் தலா 7 செமீ, நாகர்கோவில், வாணியம்பாடி, முசிறி, ஸ்ரீபெரும் புதூர் , பேச்சிப்பாறையில் தலா 6 செமீ, ஏற்காடு, தொழுதூர், பாபநாசம், செட்டிக்குளம், நாமக்கல், செம்பரம்பாக்கம், சூளகிரி, திண்டுக்கல் காமாட்சிபுரம் , போச்சம்பள்ளி, அரியலூர், இரணியல், வேலூர், திருவையாறு, பூந்தமல்லியில் தலா 5 செமீ, திருப்பத்தூர், சேந்தமங்கலம், பவானிசாகர், திருச்சி, குளச்சல், சத்தியமங்கலம், மேட்டூர், நிலக்கோட்டையில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## குமரி மாவட்டம் முழுவதும் கொட்டித் தீர்த்தது : முள்ளங்கினாவிளையில் 140 மி.மீ மழை பதிவு




நாகர்கோவில் குமரி மாவட்டம் முழுவதும் கனமழை பெய்த நிலையில் : முள்ளங்கினாவிளையில்140 மி குமரி மாவட்டம் . மீ மழை பதிவாகி இருந்தது. நேற்று முன்தினம் . முழுவதும் அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்து வந்தது

மலையோர பகுத . மாலை முதல் விடிய விடிய கன மழை கொட்டி தீர்த்தது ிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை காணப்பட்டது இதனால் . இதனால் . நாகர்கோவில் நகர பகுதிகளில் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது வடிகால்களில் பாய்ந்தோடிய வெள்ளம் சேறு சகதியை சாலையில் இழுத்து வந்தது . ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது மாவட்டத்தில் . அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில்140 மி. மீ மழை பதிவாகி இருந்தது.

குமரி மாவட்டம் குளச்சல் முதல் கீழக்கரை வரையிலான கடல் பகுதியில் 10 அடி உயரத்திற்கு ராட்சத அலைகள் காணப்படும் என்றும், கடலுக்கு செல்கின்ற மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் இந்திய கடல் தகவல் சேவை மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை . நீர்மட்டம்11.50 அடியாக இருந்தது அணைக்கு .563 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது .151 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது பெருஞ்சாணி . நீர்மட்டம்39 அடியாகும் அணைக்கு .477 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்ட நிலையில், 403 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்ததுசிற்றார் .1ல் 2.10 அடியும், சிற்றார்2ல் 2.19 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது பொய்கையில் மைனஸ் .2.70 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 21.74 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது . நாகர்கோவில் நகர பகுதிக்கு குடிநீர் வழங்கி வருகின்ற முக்கடல் அணையின் நீர்மட்டம் மைனஸ்15.30 அடியாக உள்ளது.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து 14,751 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து :12,703 கன அடியில் இருந்து 14,751 கன அடியாக அதிகரித்துள்ளதுகர்நாடகா மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் . மேட்டூர் அணையின் . கனமழையால் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது நீர்மட்டம் ஒரே வாரத்தில்10.65 அடி உயர்ந்து 69.05 அடியாக உள்ளது.